# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அன்னூர்.</u>
## <u>Deposition of witness</u>

02.03.2026 **அ.வ.எண். 358/2023** DW–1

| | |
|---|---|
| பெயர் | சின்னச்சாமி |
| த.பெ. | அவினாசிக்கவுண்டர் |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் அவிநாசிக்கவுண்டரின் மகன் என்றால் சரிதான். இந்த வழக்குச் சொத்தின் காலையில் உள்ள கிணற்றில் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் தலா பொதுவில் சரிபாதி பாகம் என்றால் சரிதான். அந்த கிணற்றில் உள்ள மின் இணைப்பும் பொது தான் என்றால் சரிதான். அதன் மின் இணைப்பு எண் என்ன என்றால் 279. அதில் ஆளுக்கு ஒரு நாள் தண்ணீர் இறைவை முறை என்றால் சரிதான். முதலில் நான் லாரி ஓட்டுநராக தொழில் செய்தேன் என்றும் என் தந்தை இறந்த பின் நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த பொது மின் இணைப்பிற்கான கம்பம் என் காட்டிற்குள் உள்ளது என்று சொன்னால் அந்த கம்பமும் பொது இடத்தில் தான் உள்ளது. அந்த கம்பத்தில் இருந்து ஸ்டாட்ர்டருக்கு எவ்வளவு துாரம் என்றால் 4 அடி. கம்பத்தில் ஒரு ப்யூஸ் கேரியர் என்றும், நீர் எடுத்துவிடும் இடத்தில் ஒரு ப்யூஸ் கேரியர் என்றால் சரிதான். வாதிக்கு தனி ஆழ்குழாய் கிணறு(borewell) எங்களுக்கும் தனி ஆழ்குழாய் கிணறும் உள்ளது என்றால் சரிதான். வாதி மேற்படி சொன்ன பொது லைனில் இருந்து தான் அவரது போருக்கு மின் இணைப்பு எடுத்திருந்தார் என்றால் சரிதான். நாங்களும் அதில் தான் ஓட்டிக் கொண்டிருந்தோம்.

2. கடந்த 2014ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்த போதே எங்களுக்கு தனி லைன் இருந்தது என்றால் நாங்கள் 2011ம் ஆண்டே இணைப்பு பெற்றுவிட்டோம். வாதி கம்ப்ரசர் வைத்து பொது லைனில் அவரது ஆழ்துளைக் கிணற்றினை ஓட்டிக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். என் அப்பா மற்றும் வாதிக்கு மேல்புரத்து பொலி தொடர்பாக பிரச்சனை இருப்பது தொடர்பாக இந்த நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு அ.வ.எண். 258/2023 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். என் தந்தைக்கும் வாதிக்கும் இடையே சிட்டாவில் அளவு குறைவாக இருப்பது தொடர்பாக வருவாய் துறையில் வழக்கு தொடர்ந்து அது தொடர்பாக இருவருக்கும் மனஸ்தாபம் இருந்தது என்று சொன்னால் சரிதான். கடந்த 2013ம் ஆண்டு இந்த வழக்கு தொடர்பாக ஒரு சமரசம் பேசப்பட்டது என்றால் சரிதான். அது என் தந்தை தான் பேசினார் என்றும் அது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. மேற்கண்ட சமரசம் பேசிய போது சிவசாமி மற்றும் அவிநாசிக்கவுண்டருக்கு இடையே வாய்வார்த்தை கைகலப்பாக மாறும் சூழ்நிலை இருந்தது என்று சொன்னால் தவறு. அது எனக்கு தெரியாது என்றும், அந்த சம்பவம் நான் லாரிக்கு சென்றுவிட்டதால் தெரியாது என்று சொன்னால் தவறு, அப்படி எதுவும் நடந்திடவில்லை. அந்த கோபத்தில் என் தந்தை இந்த பிரச்சனை முடிந்தால் தான் தண்ணீர் இறைக்கவிடுவேன் என்று கட்டை எடுத்தார் என்று சொன்னால் அது தவறு. சிவசாமி இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது இது உரிமையியல் வழக்கு என்று தெரிவித்து அங்கு புகார் ஏற்றுக் கொள்ளப்படாததால் குற்ற வழக்கு தொடர முடியவில்லை என்றால் தவறு. எங்களுக்கு தனி மின் இணைப்பு இருந்தது என்றும், வாதிக்கு தனி மின் இணைப்பு எதுவும் இல்லை என்றும், வாதி அந்த பொது மின் இணைப்பினை உபயோகப்படுத்தக் கூடாது என்பதற்காக என் தந்தை ப்யூஸ் கேரியரை எடுத்துக் கொண்டார் என்றும் அதனால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் அது போன்று எதுவும் நடந்திடவில்லை. இது நாள் வரையிலும் வாதி அதில் தண்ணீர் இறைத்துக் கொண்டு தான் உள்ளார்.

4. வாதியின் பாக சொத்தில் அவர் தென்னை வளர்த்து வருகிறார் என்றால் சரிதான். வாழை மற்றும் மரவள்ளியும் அவர் விவசாயம் செய்து வருகிறார். வாதிக்கு என் தந்தையாருக்கு பின் பொது மின் இணைப்பில் தண்ணீர் இறைக்கும் உரிமையினை தடுக்க எங்களுக்கு உரிமையில்லை என்று சொன்னால் நாங்கள் அதை தடுக்கவேயில்லை. இன்று வரையிலும் அவர் அதில் தண்ணீர் எடுத்துக் கொண்டு தான் உள்ளார். என் தந்தை கடந்த 2012ல் தடுத்ததின் விளைவு தான் இந்த வழக்கு என்றும், அது எனக்கு தெரியாது என்றும் சொன்னால் அது தவறு, என் தந்தை அதை தடுக்கவேயில்லை.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur